மின்சார வாகனத் துறையில் புரட்சி: சாதிக்க வருகிறது சென்னை ஐஐடி!!

எலெக்ட்ரிக் வாகனங்களில் பயன்படுத்தப்படும் லித்தியம் அயன் பேட்டரிகளுக்கு மாற்றாக மெக்கானிக்கல் ரிச்சார்ஜபிள் ஜிங்க் அயன் பேட்டரிகளை சென்னை ஐஐடி ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கி வருகின்றனர். லித்தியம்அயன் பேட்டரிகளுடன் ஒப்பிடும்போது ஜிங்க்அயன் பேட்டரி மலிவானது.

இந்தப் புதிய துத்தநாகஅயன் பேட்டரி தொழில்நுட்பத்திற்கான காப்புரிமைக்கு விண்ணப்பித்துள்ள ஆராய்ச்சியாளர்கள், இந்தத் துத்தநாக அயன் பேட்டரிகளை உருவாக்க முக்கிய தொழில் நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

பேட்டரிகளை முழுமையாக சார்ஜ் செய்தாலும் ஒரு சார்ஜிங்கில் நீண்ட தூர பயணம் செல்ல முடியுமா? என்ற அச்சம் இன்றுவரை இருப்பதால் இத்துறை சார்ந்த ஆய்வுகளை மிக ஆர்வமாக உலகமே உற்றுப் பார்த்துக் கொண்டு இருக்கிறது.

நம்மில் பலர் தங்கள் அடுத்த வாகனமாக எலக்ட்ரிக் வாகனங்களை தேர்ந்தெடுக்கலாம் என்று யோசித்தாலும் அது சரியான முடிவாக இருக்குமா? நாம் எலெக்ட்ரிக் வாகனங்களை வாங்கும் முன்னர், அதன் உள்ளே இருக்கும் அமைப்புகள் மற்றும் பாகங்களை பற்றி நிச்சயம் தெரிந்துகொள்ள வேண்டும். அது எலெக்ட்ரிக் வாகனங்கள் பற்றிய புரிதலை இன்னும் அதிகரிக்கும்.

எலெக்ட்ரிக் வாகனங்களில் உள்ள முக்கிய பாகங்களில் ஒன்று எலெக்ட்ரிக் மோட்டார் ஆகும். இந்த மோட்டார்கள் வாகனத்தின் சக்கரங்களுடன் இணைக்கப்பட்டிருக்கும். இவை சராசரி ICE வாகனங்களில் உள்ள என்ஜின் போன்றவை. இந்த மோட்டார்கள் பவர் ரேட்டிங் வைத்திருக்கும். அதாவது என்ஜின் சிசி என்று நாம் அழைப்பது போல மோட்டார் பவர் ரேட்டிங் கொண்டு அழைக்கப்படுகிறது.

சார்ஜ் செய்ய வேண்டும்

நாம் ICE வாகனங்களுக்கு பெட்ரோல் போடுவது போல, இந்த வகை வாகனங்களுக்கு நாம் சார்ஜ் செய்ய வேண்டும். இந்த வகையில் நாம் சார்ஜ் செய்யும்போது அவற்றை சேமிக்கும் கருவிதான் இந்த பேட்டரி. இந்த பேட்டரி குறைய தொடங்கியவுடன் வாகனத்தின் திறன் குறைய தொடங்கும் அல்லவா? அப்போது வாகனத்தில் உள்ள மோட்டார்களை கொண்டு அவற்றை ஜெனெரேட்டர் போல பயன்படுத்தி, அதன் மூலம் பேட்டரியை சார்ஜ் செய்ய முடியும்.

மிதிவண்டியில் சக்கர சுழற்சியை வைத்து மின்காந்த மின்சாரத்தால் 'டைனமோ' உடன் விளக்குகளை எரிய வைத்தோம். அதே தாத்பரியத்தை வைத்தே மின்சார வாகனங்கள் இயங்குகிறது.

இதன் பெயர் ரீஜெனெரேட்டிவ் பிரேக்கிங் என்று அழைக்கப்படுகிறது. இதன் மூலம் நாம் தனியாக சார்ஜ் செய்யாமல் மோட்டார் மூலம் வாகனங்களுக்கு தேவையான சார்ஜிங் பெறமுடியும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு' என்பது மிகமுக்கிய காரணமாக இருந்தாலும், பொருளாதார நெருக்கடியும், பேட்டரி வாகனங்களுக்கான தேவையை அதிகப்படுத்தியிருக்கிறது. இந்திய அரசாங்கம் பேட்டரி வாகனங்களுக்கு முன்னுரிமை வழங்க தொடங்கி இருக்கிறது.

உலகளவில் அதிகளவிலான எலக்ட்ரிக் வாகனங்கள் உலா வருவது சீனாவில்தான். அதற்கு அடுத்தபடியாக அமெரிக்கா, நார்வே, ஜப்பான், இங்கிலாந்து என எலக்ட்ரிக் வாகனங்களை அதிகம் பயன்படுத்தும் நாடுகளின் பட்டியல் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

எலெக்ட்ரிக் வாகனம்

இந்த வளர்ச்சிக்கு காரணம் எலக்ட்ரிக் வாகனங்கள் பெட்ரோல் டீசல் வண்டிகளை விட, அதிகளவில் 'மைலேஜ்' தருவது நிரூபணமாகி இருக்கிறது. அதேசமயம், பெட்ரோல் டீசல் விலை மற்றும் மின்சார விலை, மைலேஜ் விஷயங்களை ஒப்பிட்டு பார்த்தால் எலக்ட்ரிக் வண்டிகள் லாபகரமானதாகவே தோன்றுகின்றன.

லித்தியம்அயன் பேட்டரிகள் எலக்ட்ரிக் வாகனங்களில் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. லித்தியம் அயன் பேட்டரிகளின் முக்கிய உற்பத்தியாளராக இருக்கும் சீனா, எலக்ட்ரிக் பேட்டரி உற்பத்தித் துறையில் ஆதிக்கம் செலுத்துகிறது. தற்போது, இந்திய எலக்ட்ரிக் பேட்டரி உற்பத்தி நிறுவனங்கள், பெரு ம்பாலும் சீனாவிலிருந்து லித்தி யம்அயன் பேட்டரிகளை இறக்குமதி செய்கின்றன.

மின்சார வாகனங்களில் மின்சாரம் என்பது மெக்கானிக்கல் ஆற்றலாக மாற்றப்படுகிறது. மோட்டார், பியூஸ் மற்றும் கண்டக்டர் போன்ற உதிரி பாகங்களின் பயன்பாட்டால் ஆற்றல் வீணாகி நாம் 80 சதவீதம் மெக்கானிக்கல் எனர்ஜியாக உபயோகிக்கின்றோம்.

பெட்ரோல் வாகனங்களை எடுத்துக்கொண்டால், கெமிக்கல் எனர்ஜியில் இருந்து வெறும் 35 சதவீதம் மட்டுமே நமக்கு மெக்கானிக்கல் எனர்ஜியாகக் கிடைக்கிறது. அதாவது எலக்ட்ரிக் வாகனங்களில் இருமடங்கு 'மைலேஜ்' சாத்தியமாகிறது!

விபத்தில் தீப்பிடிக்காது

ஐஐடி மெட்ராஸின் இரசாயனப் பொறியியல் துறையின் உதவிப் பேராசிரியரான டாக்டர் அரவிந்த் குமார் சந்திரன் மற்றும் அவரது ஆராய்ச்சிக் குழுவினர், லித்தியம் அயன் பேட்டரிகளுக்கு மாற்றாக, துத்தநாகம் பரவலாகக் கிடைக்கும் வளமாக இருப்பதால் அவர்கள் துத்தநாகஅயன் பேட்டரி ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களின் ஆராய்ச்சியின் பயனாக தற்போதுள்ள தொழில்நுட்பத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான வழிகளையும் கண்டுபிடித்து வருகிறோம் என்று கூறி உள்ளார்கள்.

இந்திய சூழலுக்கு ஏற்ற வகையில் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட துத்தநாகஅயன் பேட்டரிகளில் நீரிய மின்பகுளி (aqueous electrolyte) இருப்பதால் மிகவும் பாதுகாப்பானவை. மின்சார வாகனங்கள் விபத்தில் சிக்கும் மோசமான தருணங்களில் கூட இவை தீப்பிடிக்காது.

மாற்றிக்கொள்ளும் வசதி

ஐஐடி மெட்ராஸின் தொழில்நுட்பம் 'பேட்டரி ஸ்வாப்பிங்' அடிப்படையிலானது. இதில் வாகனப் பயனர்கள் பேட்டரியின் பயன்படுத்திய 'துத்தநாக கேசட்டுகளை' முழுமையாக சார்ஜ் செய்யப்பட்ட 'துத்தநாக கேசட்டுகளுடன்' இந்த ஜிங்க் ரீசார்ஜ் நிலையங்களில்' மாற்றிக் கொள்ளலாம். சோலார் பேனல்கள் மூலமும், 'துத்தநாக கேசட்டுகளை' ரீசார்ஜ் செய்யவும் ஆராய்ச்சியாளர்கள் முயன்று வருகின்றனர்.

2030–ம் ஆண்டு உலகின் சாலைகளில் பாதிக்குப் பாதி எலெக்ட்ரிக் கார்கள் தான் ஓடும் என ஆய்வு ஒன்று சொல்கிறது. எதிர்காலத்தில் உலகில் உள்ள சாலைகளில் எந்த விதமான வாகனங்கள் அதிகமாக இருக்கும் என்று யோசிக்கும் போது விஷ புகையைக் கக்கும் பெட்ரோல் டீசல் வாகனங்கள் மின்சார வாகனங்களுக்கு வழிவிடும் என்று எதிர்பார்க்க வைக்கிறது. அந்த நவீன யுக புரட்சியில் ஐஐடி சென்னையும் அதிமுக்கிய பங்காற்ற களம் இறங்கி இருப்பது பாராட்டை பெறுகிறது.

நதிநீர் இணைப்புத் திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடுவதா?

கர்நாடக அரசின் செயலுக்கு ஓ.பி.எஸ். கண்டனம்

சென்னை, ஜூன் 1–

நதிநீர் இணைப்புத் திட்டத்திற்கு முட்டுக்கட்டை போடும் கர்நாடக அரசிற்கு ஓ. பன்னீர்செல்வம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

''காவேரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணையைக் கட்டுவோம்" என்று கர்நாடக அரசும், அங்குள்ள அரசியல் கட்சிகளும் கூறுவது காவேரி நடுவர் மன்றத் தீர்ப்பிற்கு முற்றிலும் முரணானது என்பதால், கர்நாடக அரசின் தன்னிச்சையான முடிவைக் கண்டித்து இந்த ஆண்டு மார்ச் மாதம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, இந்தத் திட்டத்திற்கு எந்தவிதமான தொழில்நுட்ப மற்றும் சுற்றுச்சூழல் அனுமதியை மத்திய அரசு அளிக்கக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டது.

மேகதாது அணை குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை எதிர்த்தும், மேகதாது அணை திட்டத்திற்கு அனுமதி அளிக்க வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தியும் கர்நாடக சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கர்நாடக சட்டசபை தீர்மானம்

இது மட்டுமல்லாமல், காவிரி படுகை மாநிலங்களின் உரிய பங்கு குறித்து ஒரு முடிவு ஏற்படும் வரையில், தமிழ்நாட்டின் கோதாவரி – கிருஷ்ணா – பெண்ணாறு – காவேரி – வைகை – குண்டாறு நதிநீர் இணைப்புத் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கைக்கு அனுமதி அளிக்கக்கூடாது என்றும் கர்நாடக சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதற்கு கர்நாடக அமைச்சரவை அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளதாகவும், இது மத்திய அரசுக்கு அனுப்பப்பட உள்ளதாகவும் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன. கர்நாடக அரசின் இந்தச் செயலுக்கு அண்ணா தி.மு.க.வின் சார்பில் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி படுகை மாநிலங்களின் உரிய பங்கு குறித்து காவிரி நடுவர் மன்றம் 2007 ஆண்டே தனது இறுதித் தீர்ப்பினை வழங்கிவிட்டது. இதன்படி, 192 டி.எம்.சி. நீரை தமிழ்நாட்டிற்கு கர்நாடகா திறந்து விட வேண்டும். இந்தத் தீர்ப்பின்படி கேரள மாநிலத்திற்கு 30 டி.எம்.சி. நீரும், புதுச்சேரிக்கு 7 டி.எம்.சி. நீரும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தீர்ப்பினை எதிர்த்து கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. தமிழ்நாட்டிற்கு ஏற்கெனவே உரிய நீருக்குப் பதிலாக உபரி நீர் தான் கிடைத்து வருகிறது. வரும் உபரி நீரையும் தடுக்கும் நோக்கில் 67 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட மேகதாது அணை கட்டப்படவேண்டும் என்று கர்நாடாக சொல்வதும், நதிநீர் இணைப்புத் திட்டத்தை முடக்கும் நோக்கத்துடன் செயல்படுவதும் முற்றிலும் நியாயமற்ற செயல்.

நமது உரிமையை பறிப்பதா?

இந்த நியாயமற்ற செயலை அனுமதித்தால், கீழ்மடை மாநிலமான தமிழ்நாட்டிற்கு தற்போது வந்து கொண்டிருக்கும் உபரி நீரும் கிடைக்காமல் போகக்கூடிய சூழ்நிலை உருவாகும். இதன் விளைவாக காவேரி நீரை நம்பி விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளின் வாழ்வாதாரம் வெகுவாகப் பாதிக்கப்படுவதோடு, வேளாண் தொழிலே முடங்கக்கூடிய அபாயம் ஏற்படும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், மேகதாது அணை கட்டப்படும் என்ற கர்நாடக அரசின் நிலைப்பாடு காவேரி நதிநீர்ப் பங்கீட்டில் தமிழ்நாட்டிற்கு உள்ள உரிமையை பறிக்கும் செயலாகும்.

எனவே, தமிழ்நாடு முதலமைச்சர் இதில் உடனடியாகத் தலையிட்டு, காவேரி படுகை மாநிலங்களின் உரிய பங்கு என்பது ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டதை சுட்டிக்காட்டி, தமிழ்நாட்டின் கோதாவரி – கிருஷ்ணா – பெண்ணாறு – காவேரி – வைகை – குண்டாறு நதிநீர் இணைப்புத் திட்டத்தின் விரிவான திட்ட அறிக்கைக்கு அனுமதி பெறவும், மேகதாது அணைத் திட்டத்தை தடுத்து நிறுத்தவும் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று அண்ணா தி.மு.க.வின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு ஓ. பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

தமிழகத்தில் 11 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு

சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு

சென்னை, ஜூன் 1–

தமிழகத்தில் 11 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

தமிழக பகுதியின் மேல் அடுக்கில் நிலவக்கூடிய காற்றின் திசைவேக மாறுபாடு காரணமாக இன்று தமிழ்நாடு, புதுவையில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்யும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

நாளை நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், நாமக்கல், கரூர், திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

மேலும் தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு மழை தொடரும் எனவும் சென்னையில் அடுத்த 48 மணி நேரத்திற்கு நகரின் ஒருசில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு வருமாறு:–

ராசிபுரம் – 9 செ.மீ., லால்குடி, வால்பாறை தாலுகா அலுவலகம், சோலையார், தாளவாடி தலா 6 செ.மீ., சின்னக்கல்லார், ஈரோடு, கெட்டி, வேப்பந்தட்டை தலா 5 செ.மீ., திருச்செங்கோடு, தக்கலை, அமராவதி அணை, வால்பாறை பிடிஓ தலா 4 செ.மீ., சாம்ராஜ் எஸ்டேட், கோபிசெட்டிபாளையம், குமாரபாளையம், நாகர்கோவில், அணைப்பாளையம் தலா 3 செ.மீ. மழை பதிவாகி உள்ளது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பெயர் மாற்றம்

Nandhakumaran Senthilkumaran, தந்தை பெயர்: Senthilkumaran, பிறந்த தேதி: 06.10.1997, கதவு நெ.13141, டவர் 13, 12வது மாடி, Prestige Bella Vista, அய்யப்பன்தாங்கல், சென்னை – 600 056, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NANTHAKUMARAN SENTHILKUMARAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

Nandhakumaran Senthilkumaran

பெயர் மாற்றம்

VASUDEVAN S/o. Veerasamy, பிறந்த தேதி: 12.05.1972, நெ.205, ஆற்றங்கரை தெரு, மேல்பெரமநல்லூர், பெரியநத்தம் கலூர், பெரமநல்லூர், காஞ்சிபுரம் – 631502, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **VASU S/O. VEERASAMY,** என்று அழைக்கப்படுகிறேன்.

VASUDEVAN S/o. Veerasamy

பெயர் மாற்றம்

NAINCY KHATOD, கணவர் பெயர்: Pankaj Kumar, பிறந்த தேதி: 19.04.1992, நெ.3, சாரங்கபாணி தெரு, தியாகராய நகர், சென்னை – 600 017, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **NAINCY,** என்று அழைக்கப்படுகிறேன்.

NAINCY KHATOD

பெயர் மாற்றம்

VENI, தந்தை பெயர்: Malaiaintha Perumal, பிறந்த தேதி: 06.01.1961, நெ.60C ஒத்தவாடி தெரு, நம்மாழ்வார்பேட்டை, பெரம்பூர் பாரக்ஸ், சென்னை – 600 012, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **VENI CLARA,** என்று அழைக்கப்படுகிறேன்.

VENI RAMASAMY

பெயர் மாற்றம்

Vinothkumar Dhavamanogaran, தந்தை பெயர்: Dhavamanoharan G, பிறந்த தேதி: 23.11.1988, நெ.206, காமராஜ் நகர், ஹவுசிங் போர்டு, சாலமேடு, விழுப்புரம், தமிழ்நாடு – 605401 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **VINOTHKUMAR DHAVAMANOHARAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

Vinothkumar Dhavamanogaran

பெயர் மாற்றம்

Venkatesan Annamalai, தந்தை பெயர்: Annamalai Subramaniam Thangavelu, பிறந்த தேதி: 01.02.1981, நெ.44/C, 3வது தெரு, மாதவ நகர், லட்சுமிபுரம், கொளத்தூர், சென்னை– 600 099, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Venkatesan Subramaniam Annamalai,** என்று அழைக்கப்படுகிறேன்.

Venkatesan Annamalai

பெயர் மாற்றம்

UMA NALINIKANTH, கணவர் பெயர்: Nalinikanth, பிறந்த தேதி: 03.09.1989, F4, அகல்யா அபார்ட்மெண்ட் 1வது மாடி, பிளாட் நெ.19, 20A, சக்கரபாணி தெரு, கூடுவாஞ்சேரி, செங்கல்பட்டு – 603202, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **UMA BALAGURU,** என்று அழைக்கப்படுகிறேன்.

UMA NALINIKANTH

SHRIRAM TRANSPORT FINANCE CO LTD
VELACHERY BRANCH VEHICLE FOR SALE

S.NO.	VEH.NO.	MAKE	MODEL
1.	TN22DL8557	MARUTI DZIRE UBER-P	2018
2.	TN07CS9132	MARUTI CELERIO TOUR H2-P	2019

CONTACT : 74189 39817

பொது அறிவிப்பு தொலைந்து போனது மற்றும் கண்டுபிடிக்கப்பட்டது

இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், எனது கட்சிக்காரர் திரு. M. ரவீந்திரன் த/பெ. மணிசாமி பிள்ளை, அலுவலகம் எண்.32, போயஸ் சாலை, 2வது தெரு, தேனாம்பேட்டை, சென்னை 600018 ஆவார். இங்கே உள்ள விவரங்களின்படி அசல் விற்பனைப் பத்திரத்தின் நகலை நாங்கள் தவறவிட்டுவிட்டோம். யாராவது அதைக் கண்டெடுத்தால், விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் அதைத் திருப்பித் தருமாறு கேட்டுக்கொள்கிறோம். தயவுசெய்து எங்களை 9840043466 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

காணாமல் போன ஆவணங்களின் பட்டியல் பின்வருமாறு:

1. கண்ணம்மாள் தனது பவர் ஏஜெண்ட் சௌந்தரராஜ் மூலம் M/s. கல்லாபுரம் எஸ்டேட்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் பிரதிநிதியான இயக்குநர் சந்திரகலா பெயரில் செயல்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட அசல் விற்பனைப் பத்திரத்தின் நகல் [ஆவணம் எண்.1934/1994 தேதி 05.10.1994, எண்.2, இணை துணை பதிவாளர் அலுவலகம், பழனி] தற்போது M/s ராஜ் அக்ரி எக்ஸ்போர்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்து.

2. துரைசாமி தனது பவர் ஏஜெண்ட் சின்னதுரை மூலம் M/s. சவுத் ஹில்ஸ் பார்ம்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் பிரதிநிதியான இயக்குனர் சுப்ரமணியம் பெயரில் செயல்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட அசல் விற்பனைப் பத்திரத்தின் நகல். [ஆவணம் எண்.1341/1996 தேதி 28.08.1996, எண். 2, இணை துணை பதிவாளர் அலுவலகம், பழனி] தற்போது M/s ராஜ் எக்கோ வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்து.

3. ராஜகோபால் தனது பவர் ஏஜெண்ட் ராஜேஸ்வரி மூலம் M/s பழனி ஹில்ஸ் பிளான்டேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் பிரதிநிதியான இயக்குனர் ஜெயசுந்தரராஜன் பெயரில் செயல்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட விற்பனைப் பத்திரத்தின் நகல் அசல். [ஆவணம் எண்.4/1995 தேதி 12.10.1994, எண்.2, இணை துணை பதிவாளர் அலுவலகம், பழனி] , தற்போது M/s VRNA மில்க் புரொடக்ஷன் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்து.

4. மகாலிங்கம் பாண்டாரம் அவர்களால் M/s. ஹை ரேஞ்ச் பார்ம்ஸ் பிரைவேட் லிமிடெட் பெயரில் செயல்படுத்தப்பட்ட பதிவு செய்யப்பட்ட அசல் விற்பனைப் பத்திரத்தின் நகல். [ஆவண எண்.608/1998 தேதி 20.05.1998, எஸ்ஆர்ஓ பழனி] தற்போது M/s ராஜ் அக்ரி ரீடெய்ல் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்குச் சொந்தமான சொத்து.

5. எஸ்.சுப்ரமணியன் மற்றும் எஸ்.பழனிக்கு ஆதரவாக ஏ.ஆனந்த் ஷா மற்றும் 6 பேரால் 29.04.2004 தேதியிட்ட ஆவண எண்.1853/2004ஐக் கொண்ட ஆவணத்தின் பதிவு செய்யப்பட்ட அசல் விற்பனைப் பத்திரத்தின் நகல்.

யு. ரம்யா.,M.Sc.,BL...MCL
பதிவு எண்.MS/438/2012
வழக்கறிஞர் & பிரமாண ஆணையர்,
சென்னை உயர்நீதிமன்றம்

தேதி: 30.05.2022
இடம்: சென்னை

aban® அபான் ஆப்ஷோர் லிமிடெட்

CIN:L01119TN1986PLC013473

பதிவு அலுவலகம்: ''ஜனப்ரியா கிரஸ்ட்'', 113, பாந்தியன் சாலை, எழும்பூர், சென்னை–600 008. Ph.044-49060606;
E-mail : abanoffshore@aban.com; Website: www.abanoffshore.com

அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") பிரிவு 110 மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014 விதி 22 மற்றும் செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிமுறைகள், 2015 ("பட்டியல் விதிமுறைகள்") விதிமுறை 44ன்படி, அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவல்களுக்கு மின்னணு வழிகளில் (தொலைதூர மின்வாக்களிப்பு) வாக்களிப்பதன் மூலம், நிறுவன உறுப்பினர்களின் ஒப்புதல் தபால் வாக்கு மூலம் கோரப்படுகிறது.

நிறுவனம்/டெபாசிட்டரிகளில் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்த அனைத்து பங்குதாரர்களுக்கும் மற்றும் 27 மே 2022 அன்று அலுவல் நேரத்தின் முடிவில் உறுப்பினர்கள் பதிவேடு/நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரீஸ் லிமிடெட் (என்எஸ்டிஎல்)/சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் லிமிடெட் (சிடிஎஸ்எல்) ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட நன்மை பயக்கும் உரிமையாளர்களின் பட்டியலில் இருக்கும் பெயர்களில் உள்ளவர்களுக்கும் கார்ப்பரேட் விவகார அமைச்சகம் வழங்கிய தளர்வுக்கு இணங்க, 23 ஜூன் 2021 தேதியிட்ட சுற்றறிக்கையின்படி, 31 மே 2022 அன்று மின்னணு வடிவத்தில் மட்டுமே நிறுவனம் தபால் வாக்கு அறிவிப்பை அனுப்பியுள்ளது.

உறுப்பினர்கள் பாதுகாப்பான வகையில் மின்னணு முறையில் வாக்களிக்க என்எஸ்டிஎல் மூலம் மின்னணு வாக்களிக்கும் வசதியை நிறுவனம் வழங்கியுள்ளது. உறுப்பினர்களின் ஒப்புதல் / மறுப்பு தொலைதூர மின்வாக்களிப்பு முறை மூலம் மட்டுமே நடைபெறும்.

மின்னணு வாக்குப்பதிவு புதன்கிழமை, 1 ஜூன், 2022 (காலை 09.00 மணி) தொடங்கி வியாழக்கிழமை, 30 ஜூன், 2022 (மாலை 05.00 மணி) அன்று முடிவடையும். குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு மேல் வாக்களிக்க அனுமதிக்கப்பட மாட்டாது.

தபால் வாக்கு முறையை நியாயமாகவும், வெளிப்படைத் தன்மையுடனும் நடத்துவதற்காக திரு. ஜி ராமச்சந்திரன், M/s. ஜி ராமச்சந்திரன் & அசோசியேட்ஸ் எல்எல்பி, நிறுவனச் செயலாளர்கள், சென்னை அவர்களை ஆராய்வாளராக இயக்குனர்கள் குழு நியமனம் செய்துள்ளது.

நிறுவனத்தின் இணையதளத்தில் தபால் வாக்கு அறிவிப்பு கிடைக்கிறது. இது 30 ஜூன், 2022 அன்று வரை என்எஸ்டிஎல் இணையதளத்திலும் கிடைக்கும்.

மின்னணு முறையில் வாக்களிக்கும் வதியுடன் தொடர்புடைய அனைத்து குறைகள் குறித்து என்எஸ்டிஎல், திருமதி.பல்லவி டி மத்ரே, டிரேட் வேர்ல்ட், ஏ விங், 4வது தளம், கமலா மில்ஸ் கம்பாவுண்ட், லோயர் பரேல், மும்பை 400 013 அல்லது pallavid@nsdl.co.in க்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.

மேலும் விவரங்கள் பிஎஸ்இ லிமிடெட், நேஷனல் ஸ்டாக் எக்ஸ்சேஞ்ச் ஆப் இந்தியா லிமிடெட் மற்றும் நிறுவனத்தின் இணையதளத்தில் (www.abanoffshore.com)ல் கிடைக்கின்றன.

குழுவின் ஆணைப்படி
S.N. பாலாஜி
துணை பொது மேலாளர் (சட்டம்) மற்றும் செயலாளர்

இடம்: சென்னை
தேதி: 26 மே 2022

படிவம் எண். INC 26

(கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30ன்படி)
மத்திய அரசு முன்பாக (பிராந்திய இயக்குனர்), தென் பிராந்தியம்
கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 13, உப பிரிவு (4) மற்றும் கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள், 2014 விதி 30 துணை விதி (6) பிரிவு (ஏ)ன் விஷயத்தில் மற்றும்

சஞ்சோக் சுகர்ஸ் மற்றும் ஈகோ–பவர் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சக்தி டவர்ஸ், டவர் – 1, 4வது தளம், 766, அண்ணாசாலை, சென்னை – 600002 விஷயத்தில் ...விண்ணப்பதாரர்

ஏப்ரல் 28, 2022 அன்று நடைபெற்ற அசாதாரண பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட சிறப்பு தீர்மானத்தின்படி, கம்பெனியின் பதிவு அலுவலகத்தை **''தமிழ்நாடு மாநிலத்தில்''** இருந்து **"ராஜஸ்தான் மாநிலத்திற்கு"** மாற்றுவதற்காக கம்பெனியின் மெமோரண்டம் ஆப் அசோசியேஷனில் திருத்தம் செய்வதை உறுதி செய்ய, கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 13ன் கீழ் மத்திய அரசுக்கு (பிராந்திய இயக்குனர்) விண்ணப்பம் ஒன்றை தாக்கல் செய்ய கம்பெனி உத்தேசித்துள்ளது என்று பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் பதிவு அலுவலகத்தை மாற்றும் திட்டத்தினால் எவரது நலமேனும் பாதிக்கப்படுவதாக கருதுவாராயின், பாதிக்கப்படும் நலன் மற்றும் எதிர்ப்பதற்கான காரணத்தை பிரமாண பத்திரத்துடன் இணைத்து பிராந்திய இயக்குனர், கார்ப்பரேட் விவகாரங்கள் அமைச்சகம், தென்பிராந்தியம், 5வது தளம், சாஸ்திரி பவன், 26, ஹாடோஸ் சாலை, சென்னை – 600 006, தமிழ்நாடு என்ற முகவரிக்கு இந்த அறிவிப்பு வெளியான பதினான்கு நாட்களுக்குள் அளிக்கலாம் அல்லது பதிவு தபால் மூலம் அனுப்பி வைக்கலாம். அதன் நகல் ஒன்றை விண்ணப்பதாரர் கம்பெனியின் மேற்கண்ட பதிவு அலுவலக முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

விண்ணப்பதாரர் சார்பாக
சஞ்சோக் சுகர்ஸ் மற்றும் ஈகோ–பவர் பிரைவேட் லிமிடெட்
ஒப்பம்/–
பிரஹலாத் சிங்
நிர்வாகஇயக்குனர்
DIN: 07409666

தேதி: 01.06.2022
இடம்: சென்னை

படிவம் எண். INC 26

(கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள் 2014, விதி 30ன்படி)
மத்திய அரசு முன்பாக (பிராந்திய இயக்குனர்), தென் பிராந்தியம்
கம்பெனிகள் சட்டம் 2013 பிரிவு 13, உப பிரிவு (4) மற்றும் கம்பெனிகள் (இணைத்தல்) விதிகள், 2014 விதி 30 துணை விதி (6) பிரிவு (ஏ)ன் விஷயத்தில் மற்றும்

எஸ்.எம். என்விரான்மெண்டல் டெக்னாலஜிஸ் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: சக்தி டவர்ஸ், டவர் – 1, 4வது தளம், 776, அண்ணாசாலை, சென்னை – 600002